2025 – ஜீலை மாதம் 10– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 112 / 2023*

*2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 10– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, ஆறுமுகம் |
| தகப்பனார் பெயர் | : | பெருமாள் |
| ஊர் | : | பெண்ணக்கோணம் கிராமம், |
| வட்டம் | : | குன்னம் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 60 |

**தேதி: 10.07.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக**

**1).**12.01.2023–ம் தேதியன்று நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் இணையதள நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**2)**.12.01.2023–ம் தேதி நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட வெளிநோயாளி சீட்டை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**3).** எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.3,** ஆக தாக்கல் செய்கின்றேன்.

**( மேற்படி ம.சா.ஆ.2 சான்றாவணம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து சமயத்தில் நான் பேருந்தில் பயணம் செய்தற்கான பயணச்சீட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. போலீசார் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையில் என்னுடைய பெயர் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. விபத்தில் எனக்கு அடிப்பட்டதில் வலி உள்ளதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு காயச்சான்று எதுவும் வழங்கப்படவில்லை. எனது மனைவிக்கு காயச்சான்று வழங்கப்பட்டுள்ளது. நானும், எனது மனைவியும் எங்களது காயங்களுக்காக ஒரே மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றால் சரிதான். நான் சொல்லியது போல விபத்து எதுவும் நடைபெறவில்லையென்றும், விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் நான் பயணம் செய்யவில்லையென்றும் சொன்னால் சரியல்ல. எனது மனைவிக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக அவருக்கு உதவியாக மருத்துவமனைக்கு அவருடன் சென்ற நான் இழப்பீடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் பேருந்தில் பயணம் செய்ததாகவும், எனக்கும் விபத்தில் காயம் ஏற்பட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான்

தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 புறநோயாளி சீட்டு இந்த விபத்திற்கு தொடர்பில்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– கே. முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**